மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ம் நாள் புதன்கிழமை
இடைநிலை மனு எண்.03/2025
இன்
அசல் வழக்கு எண்.31/2023
-------

வேல்முருகன் .. மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

இராமமூர்த்தி .. எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 31.10.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V. மாரிச்சாமி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. இராஜேஸ், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை, மனு, அபிடவிட்டு மற்றும் எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது கடந்த 19.10.2023 ம் தேதி மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய உத்தரவிட வேண்டி கட்டளை 9 விதி 7 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u>**–

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் பிரதிவாதி. மேற்படி வழக்கில் வாதி , பிரதிவாதியையும் அவரது வகையாட்களையோ தபசில் சொத்தில இடையூறு செய்யக்கூடாது என பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் கடந்த 19.10.2023 ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி தேதியில் மனுதாரர் வெளியூருக்கு வேலைக்கு

சென்றுவிட்ட காரணத்தினால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் போய்விட்டது. கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு தான் ஊருக்கு வந்துள்ளார். மேற்படி செயல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல தெய்வாதீனமாகும். மேற்படி வழக்கில் கடந்த 19.10.2023 ம் தேதியில் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்ய உத்தரவாக வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாது போனால் மனுதாரருக்கு அனேக இன்னலும் இழப்பும் ஏற்படக்கூடும். எனவே மனு தாக்கல்.

3. <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்–</u>

**3.1.** இதனடியில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மனு அபிடவிட்டில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பான, காரணத்தால் அவை முற்றிலும் மறுக்கப்படுகிறது. தாவா வழக்கில் இந்நிர் மனுதாரர்/பிரதிவாதிக்கு எவ்வித நியாயமான கட்சியும் இல்லை. அதன் காரணமாகவே எதிர்வழக்குரை தாக்கல் செய்ய பல்வேறு வாய்ப்புகள் வழங்கியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே விட்டுவிட்டு தற்போது உண்மைக்குப் புறம்பான சங்கதிகளை கொண்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/பிரதிவாதி 19.10.2023 ம் தேதி வேலைக்காக வெளியூர் சென்றதாக குறிப்பிட்டுள்ளார். என்ன வேலைக்காக எந்த ஊருக்கு சென்றார் என்ற எந்தவித தகவலையும் தெரிவிக்காமல் நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/பிரதிவாதி அவரது மனுவில் நியாயமான எந்தவொரு காரணத்தையும் குறிப்பிடவில்லை. மனுதாரர்/பிரதிவாதி சமூகம் நீதிமன்றத்தில் பொன்னான நேரத்தினை வீணடிக்க வேண்டுமென்ற தீய எண்ணத்திலும் எதிர்மனுதாரர்/வாதியை அலைக்கழிப்பு செய்ய வேண்டுமென்ற தீய நோக்கதிலும காலம் கடந்த தவறான சங்கதிகளை கொண்டு தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார். தாவா வழக்கின் எவ்வித பரிகாரமும் மனுதாரர்/பிரதிவாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல. தாவா வழக்கினை தாக்கல் செய்ய மனுதாரர்/பிரதிவாதிக்கு எவ்வித முகாந்திரமும்

கிடையாது. தாவா வழக்கு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. எனவே மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவை இந்த எதிர்மனுதாரர்/ வாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. <u>தீர்வு</u>**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் பிரதிவாதி. 19.10.2023 ம் தேதியில் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர் கூறும் காரணம் என்னவென்றால், மனுதாரர்/பிரதிவாதி வெளியூருக்கு வேலைக்கு சென்றுவிட்ட காரணத்தினால் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது என்று மனுவில் குறிப்பிட்டுள்ளார். எனவே மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** எதிர்மனுதாரர் தன்னுடைய எதிருரையில், மனுதாரர்/பிரதிவாதி கடந்த 19.10.2023 ம் தேதி வேலைக்காக வெளியூர் சென்றதாக மனுவில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் என்ன வேலைக்காக எந்த ஊருக்கு சென்றார் என்ற எந்தவித தகவலையும் தெரிவிக்காமலும், நியாயமான எந்தவொரு காரணத்தையும் குறிப்பிடாமலும், நீதிமன்றத்தின் பொன்னான நேரத்தினை வீணடிக்க வேண்டுமென்ற தீண எண்ணத்திலும், எதிர்மனுதாரர்/ வாதியை அலைகழிப்பு செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலும் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**6.3.** மனுதாரர்/பிரதிவாதிக்கு 19.10.2023 அன்று வேலைக்காக வெளியூர் சென்றுவிட்ட காரணத்தினால் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது என்பது குறித்தும், என்ன வேலைக்காக, எந்த ஊருக்கு சென்றார்

என்ற விபரத்தை மனுவில் குறிப்பிட்டு கூறாததிலிருந்து மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள காரணம் போதுமானதாக இல்லை. இருந்த போதிலும் வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டு மனுதாரருக்கு ஒரு வாய்ப்பளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கால விரயத்திற்கும், அவரது வயது மூப்பை கருத்தில் கொண்டும் மனுதாரர் செலவுத் தொகை வழங்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

## 7. இறுதி முடிவு

இறுதியாக, மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகை ரூ.500/-ஐ, 24.11.2025 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், செலுத்த தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 24.11.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**சாட்சி, சான்றாவணங்கள்**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சிவகாசி
இ.ம.எண்.03/2025
இன்
அ.வ.எண்.31/2023
உத்தரவு
நாள்-12.11.2025.